Community Resilience to Foreign Interference

# சட்ட ரீதியான ஆதரவும் ஆலோசனையும்

**குறிப்பு**: இது பொதுவான தகவல் மட்டுமே. இது உங்களின் புரிதலுக்காக வழங்கப்படுகிறதே தவிர, சட்ட ஆலோசனையல்ல.
குறிப்பிட்ட சட்ட ஆலோசனைகளுக்கு, தகுதிவாய்ந்த சட்ட நிபுணரை அணுகவும்.

ஒருவர் வெளிநாட்டுத் தலையீட்டினால் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களின் உரிமைகளையும் தங்களுக்குள்ள வாய்ப்புகளையும் புரிந்துகொள்ள சட்டபூர்வமான ஆதரவையும் ஆலோசனையையும் நாடுவது உதவியாக இருக்கும்.

## நியூசிலாந்தில் உங்களுக்கான உரிமைகள்

நியூசிலாந்தில் உங்களுக்கான உரிமைகள் குறித்து இங்கே அறியலாம்

## சட்ட ரீதியான ஆதரவு கிடைக்கும் இடங்கள்

### சமூகச் சட்ட மையம்

சமூகச் சட்ட மையங்கள் பின்வருவனவற்றிற்கு உதவக்கூடும்:

- சட்டத் தகவல்கள் மற்றும் விழிப்புணர்வு
- சட்ட ஆலோசனை, உதவி மற்றும் பிரதிநிதித்துவம் - குறிப்பாகச் சட்டச் சேவைகளுக்கான கட்டணத்தைச் செலுத்த இயலாதவர்களுக்கு இவை வழங்கப்படுகின்றன.

நியூசிலாந்து முழுவதும் 24 சமூகச் சட்ட மையங்கள் உள்ளன. பெரும்பாலான மையங்கள் சிறிய சமூகங்களில் நேரடிச் சேவைத் திட்டங்களையோ அல்லது கிளினிக் மையங்களையோ நடத்துகின்றன. முன்பதிவு செய்ய அந்தந்த உள்ளூர் மையங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கூடுதல் தகவல்களுக்குச் சமூகச் சட்ட மையத்தின் இணையதளத்திற்குச் செல்லவும்.

### இளைஞர் சட்ட மையம்

இளைஞர் சட்ட மையமானது, 25 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு இலவசச் சட்டச் சேவைகளை வழங்குகிறது.

[கூடுதல் தகவல்களுக்கு இளைஞர் சட்ட மையத்தின் இணையதளத்திற்குச் செல்லவும்.]

### பொதுமக்கள் அறிவுரை மையம்

பொதுமக்கள் அறிவுரை மையம் பின்வருவனவற்றிற்கு உதவக்கூடும்:

- உரிமைகள் குறித்த தகவல்கள்
- இலவசமான, ரகசியம் காக்கப்படக்கூடிய மற்றும் தன்னிச்சையான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்
- சட்ட ஆலோசனைகளுக்காக உங்கள் உள்ளூர் சமூகச் சட்ட மையத்திற்குப் பரிந்துரைத்தல்
- உங்களுக்குத் தேவைப்படக்கூடிய இதர சேவைகளைப் பெறுவது குறித்த தகவல்கள்

[கூடுதல் தகவல்களுக்குப் பொதுமக்கள் அறிவுரை மையத்தின் இணையதளத்திற்குச் செல்லவும்], அல்லது ரகசியத் தன்மையுடனான உதவிக்கு 0800 367 222 என்ற எண்ணிற்கு இலவசமாக அழைக்கவும்.

### சட்ட உதவி

சட்ட உதவி என்பது ஒரு வழக்கறிஞரை அமர்த்த வசதியில்லாத மக்களுக்காக அரசு வழங்கும் நிதி உதவியாகும். வழக்கறிஞருக்கான கட்டணத்தைச் செலுத்த முடியாத காரணத்தினால் எவருக்கும் நீதி மறுக்கப்படக் கூடாது என்பதற்காக, சட்ட ரீதியான உதவி பெறவும், நீதிமன்றம் வரை செல்லக்கூடிய சட்டச் சிக்கல்களைத் தீர்க்கவும் இது உதவுகிறது.

[சட்ட உதவி குறித்து இங்கே மேலும் அறியலாம்.]

### நியூசிலாந்து சட்டச் சங்கம்

நியூசிலாந்து சட்டச் சங்கம் (NZLS) என்பது நியூசிலாந்தில் உள்ள வழக்கறிஞர்களுக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பாகும். மக்கள் அதன் இணையவழித் தரவுப்பட்டியலைப் (Online directory) பயன்படுத்தித் தங்களுக்குத் தேவையான வழக்கறிஞரைத் தேடிக்கொள்ளலாம். நியூசிலாந்தில் சட்டப் பணியாற்ற அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர்களின் பட்டியல் இதில் இடம்பெற்றிருக்கும்.

[நியூசிலாந்து சட்டச் சங்கத்தின் இணையதளத்திற்குச் செல்லவும்.]